**தலைப்பு 01 – சனாதிபதி செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமானக் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்குகளும் சனாதிபதி செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 1 – சனாதிபதி செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 சனவரி 24 ஆந் திகதி சனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சனாதிபதி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை. | 2.1.1 |
| | | 2. பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை. | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.11 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2.(அ) (ஆ) (இ) (ஈ) |
| | | 2. பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1 |
| | | 3. சொத்துக்களின் பெறுமதியும் தரமும் குறைவடைதல் | 2.3 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.4 |
| | | 2. பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.9 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.6(அ) |
| | | 2. மிகை நிதி ஏற்பாடுகள் வழங்குதல் | 2.6(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | 1. வருமானக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.7 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.5 |

## 2. பொருன்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

சனாதிபதி செயலகத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அது 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.2 செயலாற்றல்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) 2016 – 2020 "பிபிதெமு பொலன்னறுவை"

பொலன்னறுவை மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை உருவாக்குவதற்காக சனாதிபதி பதவியணிப் பிரதானிப் பிரிவின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற 2016 – 2020 "பிபிதெமு பொலன்னறுவை" மாவட்ட அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டில் 25 துறைகளின் கீழ் 1985 செயற்திட்டங்களுக்காக அபிவிருத்திச் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 11,950 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது 2,891 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 8,907 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 2,472 செயற்திட்டங்கள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக பயன்பாடு மதிப்பீடு செய்யப்பட்ட செலவில் 75 சதவீதம் மாத்திரமாகும்.

#### (ஆ) உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய ரீதியாக உற்பத்தி செய்யக் கூடிய நச்சுகத்தன்மையற்ற உணவுப் பொருட்களால் நாட்டை தன்னிறைவுள்ளதாக்குவதற்கு உதவியளிக்கும் குறிக்கோளுடன் மீளாய்வாண்டில் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 600 மில்லியனை செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அதற்காக வழங்கப்பட்ட ரூபா 250 மில்லியன் அல்லது திட்டமிடப்பட்ட பணத்தில் 42 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 171.82 மில்லியன் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 9 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 131.31 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 115.77 மில்லியன் அதாவது வழங்கிய நிதி ஏற்பாட்டில் 88 சதவீதம் பல்வேறு செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்களிலிருந்து மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளும் அதன் பயன்பாடும் பின்வருமாறாகும்.

| நிறுவனம் | செயற்திட்டம் | ஏற்பாடு செய்யப்பட்ட பணம் | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செலவு | சேமிப்பு | சேமிப்பு வழங்கிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – வடமேல் மாகாண விவசாய திணைக்களம் | வெளிக்களப் பயிர்ச்செய்கை | 25.68 | 15.69 | 9.99 | 39 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – வடமத்திய மாகாண விவசாய அமைச்சு | சூரிய சக்தியால் செயற்படுகின்ற நீர் பம்பிகளைக் கொள்வனவு செய்தல் | 2.5 | 1.18 | 1.32 | 53 |
| மாவட்ட செயலகம் - ஹம்பாந்தோட்டை | உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமையை ஒழிப்பதற்காக அறுவடைக்குப் பின் பாசிப் பயறு பயிர்ச் செய்கை | 6.03 | 1.82 | 4.21 | 70 |

எவ்வாறாயினும் இலக்கிடப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட நீண்ட கால வறட்சி போன்ற காரணங்கள் இந்த குறைந்த பயன்பாட்டிற்கு காரணமாக இருந்ததாக செயலாளரால் கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் உணவு தேசிய நிகழ்சித்திட்டம் - 2017 இன் கீழ் சனாதிபதி செயலகத்தால் மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டிற்காக சனாதிபதி செயலகத்தால் ரூபா 144.98 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 65.97 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 79.01 மில்லியன் அல்லது 54 சதவீதமாக இருந்தது.

(ii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வெலி ஓயா நீரேந்து பிரதேச முகாமைத்துவத்திற்காக ஒரு திட்டத்தை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிக்கட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்துடன் 10 மாத காலத்திற்காக 2016 யூலை 14 ஆந் திகதி ரூபா 1.3 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 யூலை 31 ஆந் திகதி வரையும் இத் திணைக்களத்தால் அது தொடர்பாக ஒருங்கிணைந்த காணி பயன்பாட்டு வலய வரைபடம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக மேலதிகமாக ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 76.51 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக மத்திய பொறியியல் செயற்பாட்டு ஆலோசனைப் பணியகத்துடன் 2018 சனவரி 29 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. 180 நாட்களுக்குள் இந்த நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 யூலை 31 ஆந் திகதி வரையும் உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) இத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு உரிய நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தும் மேலே கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பௌத்த மறுமலர்ச்சி நிதியம்**

2016 யூன் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந் நிதியத்திற்கு அரசாங்க மற்றும் தனியார் துறைகளிலிருந்து ரூபா 123.11 மில்லியன் நன்கொடைகள் கிடைத்திருந்தது. இப்பணத்தில் 2016 ஆம் ஆண்டில் எந்த செலவும் செய்யப்படாததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1.23 மில்லியன் அல்லது மொத்த சேகரிப்பில் 1 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. (வங்கி கட்டணத்தை தவிர்த்து) அது நிதியத்தை தோற்றுவிக்கும் அடிப்படைக் குறிக்கோள்களுக்குப் புறம்பான ஏனைய நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக நிரந்தரமான கொள்கைத் தொகுப்பினைத் தயாரிப்பதற்கு காலம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கொள்கைத் தொகுப்பைத் தயாரிப்பதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்தில் பேரில் இச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாக செயலாளரினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டது.

## 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளல்

சனாதிபதி செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்காக ரூபா 565.71 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 505.54 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்தல்

கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு தேவையான ரூபா 19.38 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்த போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தேவைப்பாடுகளை வழங்குவதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப 3 நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்தும் அதற்காக பெறுகைக் குழுவின் மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு பெற்றுக்கொள்ளப்படாது அதற்குப் பதிலாக பராமரிப்பு செயலாளரின் சிபார்சினை அடிப்படையாகக் கொண்டு ஆகக் குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அலுவலகத்தை மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் வேண்டுகோளின் பேரில் விரைவாகப் பூர்த்திசெய்ய வேண்டியிருந்ததனால் அவ்வாறு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செயலாளரால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டின் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் செயலகத்தில் 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கை 2018 யூலை 06 ஆந் திகதியே முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சனாதிபதி ஒருங்கிணைப்பு செயலாளர் (SB 3) பிரிவு மற்றும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு (ICT) ஆகிய இரண்டு பிரிவுகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள பொருள் பதிவேட்டுப் புத்தகத்தினால் பதியப்பட்டுள்ள சில பொருட்கள் மற்றும் ஆண்டின் போது அதிகரித்தல்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iv) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது உரிய மெய்மையாய்வுச் சபையினால் பதிவேட்டுப் பொருள் புத்தகத்தைப் பேணுதல், நாளது வரையாக்குதல், புத்தகத்தை சமப்படுத்துதல் என்பன தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை சில பிரிவுகளின் பதிவேட்டுப் பொருள் புத்தகம் அவ்வாறு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பிரதான கேட்போர் கூடம்,(MCR) செய்தி கலந்துரையாடல் அறை (PCR) பிரதான சமையலறை (BAQ) ஆகிய பிரிவுகளின் பதிவேட்டுப் பொருள் புத்தகம் பேணப்படாதிருந்ததுடன் சில பிரிவுகளின் பொருள் பதிவேட்டுப் புத்தகம் மற்றும் இருப்பு புத்தகத்தை நாளது வரையாகப் பேணுவதற்காக ஒரு பொறுப்பான உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**
--------------------------------------------------

**இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) போதியளவு நிதி ஏற்பாடு இல்லாமல் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்.**
---------------------------------------------------------------------------------------------------------------

2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நிதி ஏற்பாட்டின் அளவை ரூபா 40.31 மில்லியனால் மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இனங்காணப்படாத பொறுப்புக்கள்**
-------------------------------------------------------

2018 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் போது தீர்த்து வைக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான ரூபா 23.26 மில்லியன் தொகையான செலவுகள் 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் டிஜிஎஸ்ஏ 8 படிவத்தில் பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.5 நட்டங்களும் சேதங்களும்**
-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 வரை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் கணக்காய்வுத் திகதி (2018 செப்தெம்பர் 14) வரை தீர்த்து வைக்கப்படாது காணப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை 66 ஆகும். அந்த வாகன விபத்துக்களில் 32 விபத்துக்களுக்காக அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட ரூபா 0.43 தொகையான காப்புறுதி இழப்பீட்டை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 29 வாகன விபத்துக்கள் தொடர்பாக

ரூபா 20.27 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட காப்புறுதி இழப்பீடு கணக்காய்வுத் திகதி வரை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, வாகன விபத்துக்களுக்குரிய 4 வாகனங்கள் பழுதபார்க்கப்படாததன் காரணமாக ரூபா 7.20 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமும் வாகனத்தின் பெறுமதியை விட குறைவாக காப்புறுதி செய்ததன் காரணமாக ஒரு வாகன விபத்துக்கு ஏற்பட்ட ரூபா 0.14 மில்லியன் நட்டமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை ஒரு விபத்தினைத் தவிர்த்து ஏனைய அனைத்து காப்புறுதி இழப்புக்களும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறைந்த பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள வித்தியாசம் உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்படவில்லை எனவும் செயலாளரினால் கணக்காய்விற்குத் தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 131 வாகன விபத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல் செலவு ரூபா 13.56 மில்லியனாக இருந்தது. அவற்றில் ரூபா 12.56 மில்லியன் காப்புறுதி இழப்பீடாகக் கிடைத்திருந்ததுடன் 16 விபத்துக்கள் தொடர்பாக இதுவரை அறவிடப்படாத நட்டம் ரூபா 793,334 ஆகும். அவ்வாறு அரசாங்கத்தினால் செலவு செய்வதற்கு ஏற்பட்ட கிரயத்தை நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் அதற்குப் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 46 விபத்துக்கள் சம்பந்தமாக கணக்காய்வுத் திகதி வரை உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த நட்டங்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஏதாவது விபத்து சம்பந்தமாக முழுமையான அறிக்கையினை வழங்குவதற்கு 7 நாட்கள் தாமதம் ஏற்படுமாயிருந்தால் அந்த விபத்து சம்பந்தமாக உடனடியாக தொடக்க (ஆரம்ப) விசாரணையை நடாத்தி தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் நிதி பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விபத்து இடம்பெற்ற திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான விசாரணைரய நடாத்தி முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் சனாதிபதி செயலகத்தால் அவ்வாறு நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக விபத்து சம்பந்தமான பொறுப்பான நபர்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்நிலைமையைத் தவரித்துக் கொள்வதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில விபத்துக்கள் சம்பந்தமாக வாகனம் விபத்துக்குள்ளாகிய சந்தர்ப்பத்தில் சாரதியால் அல்லது உரிய வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் பொய்யான தகவல்களை சமர்ப்பித்ததன் அடிப்படையில் காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதி நலன்கள் நிராகரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**2.6 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் சனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்படுத்துதல், சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 4,659.02 | 4,490.57 | 168.45 | 04 |
| | மூலதனம் | 4,410.25 | 3,734.41 | 675.84 | 15 |
| | **மொத்தம்** | **9,069.27** | **8,224.98** | **844.29** | **09** |
| 2014 | மீண்டுவருபவை | 4,826.27 | 4,692.84 | 133.43 | 03 |
| | மூலதனம் | 5,691.53 | 5,182.68 | 508.86 | 09 |
| | **மொத்தம்** | **10,517.80** | **9,875.52** | **642.29** | **06** |
| 2015 | மீண்டுவருபவை | 2,194.22 | 2,115.99 | 78.23 | 04 |
| | மூலதனம் | 1,533.51 | 1,191.05 | 342.47 | 22 |
| | **மொத்தம்** | **3,727.73** | **3,307.04** | **420.70** | **11** |
| 2016 | மீண்டுவருபவை | 2,063.99 | 1,985.10 | 78.89 | 04 |
| | மூலதனம் | 4,796.39 | 4,198.19 | 598.20 | 12 |
| | **மொத்தம்** | **6,860.38** | **6,183.29** | **677.09** | **10** |
| 2017 | மீண்டுவருபவை | 3,642.33 | 3,240.59 | 401.74 | 11 |
| | மூலதனம் | 6,659.15 | 4,676.77 | 1,982.38 | 30 |
| | **மொத்தம்** | **10,301.48** | **7,917.36** | **2,384.12** | **23** |

**நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.**

05 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 104.08 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

23 செலவு விடயங்களுக்காக ரூபா 3,698.76 மில்லியன் கூட்டுமொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அச் செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,916.95 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.7 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

### 2.7.1 வருமான குறியீடு – 10.02.11.00

சனாதிபதி செயலகத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக 10.02.11.00 எனும் வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 43,000 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது ரூபா 36,000 மில்லியன் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 33,398.73 மில்லியனாக இருந்ததுடன் அது திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 93 சதவீதமாகும்.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சனாதிபதி செயலகத்தால் அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2016 யூலை 15 ஆந் திகதிய FM/F3/Revenue இலக்க கடிதத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக தொலை தொடர்பு குத்தகை வருமானமாக ரூபா 33,000 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டிற்கான தொடக்க மதிப்பீடு ரூபா 43,000 மில்லியனாக மாற்றம் செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 36,000 மில்லியன் வரை அதாவது ரூபா 7,000 மில்லியனால் அல்லது 16 சதவீதத்தால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ii) ஏதாவது ஆண்டிற்குரிய நிலுவையான தொலைத் தொடர்பு குத்தகை வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது அதற்குப் பின்னர் வரும் ஆண்டின் போது உரிய தொலைபேசிக் கம்பனியால் செலுத்தப்படுகின்ற குத்தகைப் பெறுமதி அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே பின்னைய ஆண்டுகளின் போதும் நிலுவைக் குத்தகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நிலுவை வருமானத்தை இனங்காண்பதற்காக ஒரு உறுதியான நடைமுறை இருக்கவில்லை. அதற்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 நிறுவனங்களால் செலுத்த வேண்டிய தொலைத் தொடர்பு குத்தகை ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்படாதிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரை 03 நிறுவனங்களிடமிருந்து அந்த நிலுவைக் குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த நிலுவையான குத்தகை வருமானப் பெறுமதியும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவீடு செய்வதற்குள்ள நிலுவை வருமானம் மேலும் மேலும் ஒன்று சேர்வதனைத் தவிர்த்தல் மற்றும் வருமான

கணக்கீட்டு உத்தியோகத்தரால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் குத்தகை வருமானத்தை சேகரித்தல் மற்றும் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

**2.7.2 வருமானக் குறியீடு இல்லாது வருமானத்தை சேகரித்தல்**

------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 149(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அனைத்து வருமான வரிகள், சுங்க வரிகள், வீதவரிகள், கட்டணங்கள் ஆகிய மூலங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களும், உரிய செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படாத குடியரசுக்குச் சொந்தமான ஏனைய அனைத்து வருமானங்களும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் தாமரைத் தடாகம் கலையரங்கின் பிரதான திரையரங்கு திறந்த வெளி திரையரங்கு, முன் பயிற்சி மண்டபம், திறந்த வாகன தரிப்பிடம், உணவுச்சாலை என்பவற்றை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட ரூபா 141.55 மில்லியனையும் உள்ளடக்கி 2011 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் 31 வரை உழைத்த ரூபா 448.68 மில்லியன் மொத்த தொகையான வருமானமும் பெறுவனவுகளும் அவ்வாறு திரண்ட நிதியததிற்குச் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிலிருந்து சனாதிபதி செயலகம் தாமரைத் தடாக கலையரங்கை வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானத்திற்காக பொதுத் திறைசேரியின் அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் மூலம் புதிய வருமானக் குறியீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது காணப்படுகின்ற ஏனைய வருமானக் குறியீட்டின் கீழ் வருமானங்களைச் சேகரிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அவ்வாறே, தாமரைத் தடாக கலையரங்கிற்காக ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு அதற்காக பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் பொது வைப்புக் கணக்கிற்கு சேகரிக்கப்பட்ட வருமானத்தின் மூலம் செலவு செய்யப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு 2017 ஆம் ஆண்டின் போது தாமரைத் தடாக கலை அரங்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 80.48 மில்லியனாகும். மேலும், தாமரைத்தடாக கலையரங்கின் 2014 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்படாத விலைப்பட்டியலைத் தீர்த்து வைப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் குறைநிரப்பு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 95.84 மில்லியன் தொகையான மேலதிக நிதி ஏற்பாடு சனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானம் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு வரைபில் உள்ளடக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் பொதுத் திறைசேரி இதற்காக நிதி ஏற்பாட்டை

ஒதுக்கீடு செய்யவில்லை என செயலாளரால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு - 2017

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

சனாதிபதி செயலகத்திற்குரிய 00101 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 58.00 | 44.98 | 18.00 | 19.36 | 100.00 | 85.48 |

இது சம்பந்தமான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டு மொத்தமானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 1.5 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 01 ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு சனாதிபதி செயலகத்திற்கு முடியாதிருந்தது.

### 2.9 பொது வைப்புக் கணக்கு

சனாதிபதி செயலகதின் கீழுள்ள 07 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் மொத்தம் ரூபா 546.66 மில்லியனாகும். அவற்றிற்கு மத்தியில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 318.93 மில்லியன் கூட்டு மொத்தமான 04 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிகைகை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.10 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான நடைமுறையற்ற சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமானவகையில் முறையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருளுக்காக தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் சனாதிபதி செயலகத்தால் அச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

**இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவு**

செயலகத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காக ரூபா 556.99 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 536,083 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | | உள்ளபடியான பதவியணியினர் | | | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | தற்காலிகம் | நிரந்தரம் | தற்காலிகம் | ஒப்பந்தம் | இணைத்துக் கொள்ளல் | நிரந்தரம் | தற்காலிகம் | நிரந்தரம் |
| (i) | சிரேஷ்ட மட்டம் | 58 | 149 | 63 | 72 | 04 | 21 | - | 77 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 11 | 81 | 10 | 21 | 21 | 12 | 01 | 60 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 335 | 105 | 293 | 53 | 22 | 37 | 42 | 52 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 613 | 145 | 325 | 26 | 23 | 36 | 288 | 119 | - |
| | **மொத்தம்** | 1,017 | 480 | 691 | 172 | 70 | 106 | 331 | 308 | 05 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) சிரேஷ்ட மட்டம் மற்றும் மூன்றாம் மட்டத்தின் அங்கீகரித்த தற்காலிக பதவியணியினரை அங்கீகரித்த நிரந்தர பதவியணியினருடன் ஒப்பிடுகையில் 157 சதவீதம் மற்றும் 636 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஷ்ட மட்டத்தின் மிகைப் பதவியணியினர் 05 ஆக இருந்ததுடன் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 639 ஆகும். மிகையான பதவியணியினருக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெற்றிடங்கள் காணப்படுதல் செயலகத்தின் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் அவற்றை நிரப்புதல் அல்லது முடியாதிருந்தால் பதவியணியைத் திருத்தம் செய்யும் தேவைப்பாட்டிற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.